

தமிழ்நாடு சட்டப்பேரவை 2024–2025 ஆம் ஆண்டிற்கான பொது கணக்குக் குழு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டு பொதுமக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றிட பொது கணக்குக் குழு உறுதுணையாக இருந்திடும் என பொதுக்கணக்கு குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்தார். இக்கூட்டத்தில் பொதுக் கணக்கு குழு உறுப்பினர்கள் இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் சட்டமன்ற உறுப்பினர், ஜெ.முகம்மது ஷாநாவாஸ். சட்டமன்ற உறுப்பினர் நாகப்பட்டினம், அக்ரி கிருஷ்ணமூர்த்தி. (சட்டமன்ற உறுப்பினர் போலூர், சி.வி.எம்.பி.எழிலரசன் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம், எஸ்.சந்திரன் சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி, ஆர்.டி.சேகர், சட்டமன்ற உறுப்பினர் பெரம்பூர்), பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, மாவட்ட வன உயிரின காப்பாளர் டாக்டர்.இரா.முருகன், பரமக்குடி சார் ஆட்சியர் .அபிலாஷா கௌர், இணைச்செயலாளர் ரேவதி, மாவட்ட வன அலுவலர் ஹேமலதா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி நேற்று (27.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் பதிவு செய்த அன்றே அனைத்து ஆவணங்களையும் (100%) உரிய நபர்களுக்கு திரும்ப வழங்கி சிறப்பாக பணியாற்றிய ஏழு சார்பதிவாளர்களுக்கு வெள்ளி பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் உடனிருந்தனர்.

### எத்தனை தடைகள் வந்தாலும் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றும் அரசு!

# மீண்டும் மக்களின் ஆதரவுடன் கழக ஆட்சி அமையும்!

## கரூர் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், ஜன. 28 -

எத்தனை தடைகள் வந்தாலும் அதனை உடைத்து மக்கள் நலத்திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. மீண்டும் கழக ஆட்சி அமைய மக்கள் முடிவு எடுத்து விட்டனர் என கரூரில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கரூர் உழவர் சந்தை எதிரில் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்ஜி. சரவணமூர்த்தி தலைமை வகித்தார். துணை அமைப்பாளர் டிடிகே. அருள்முருகன் வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், கழக சட்ட திட்ட திருத்த குழு செயலாளருமான இரா .கிரி ராஜன், கரூர் மாவட்ட கழகச் செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தலைமைக் கழக பேச்சாளர்கள் கோபி வே.குமணன், தீக்கனல் கருணாநிதி, எம்எல்ஏக்கள் இரா. மாணிக்கம், பி ஆர்.இளங்கோ. க.சிவகாமசுந்தரி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், வர்த்தக அணி துணை செயலாளர் பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார், கரூர் மாநகரச் செயலாளர் எஸ்.பி கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன் சிறப்புரையாற்றினர்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது

தளபதி அவர்கள் இன்று பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். புதுமைப்பெண் திட்டம் அரசு அரசு உதவிபெறும் பள்ளியில் படித்த மாணவிகள் உயர்நிலைக் கல்வி செல்லுகின்ற பொழுது மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய மகத்தான திட்டத்தில் உயர்கல்வி பயிலுவோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

அதேபோல நான் முதல்வன் அற்புதமான திட்டத்தை முன்னெடுத்து இன்னும் இலட்சக்கணக்கான மாணவர்களும் மாணவிகளும் அந்த திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்பதற்காக அதை இன்னும் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். காலை உணவு திட்டம் வேலைக்கு செல்லுகின்ற தாய்மார்கள் தூய்மை பணியாளர் எல்லாம் காலையிலேயே எழுந்து கிளம்புகிறார்கள் என்று சொன்னால் களத்தில் கவலையோடு நின்று பின்னர் சென்று பணியாற்ற வேண்டும். அதனை மாற்றி தாய்மார்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மகளிருக்கு மாதம் தோறும் ரூ. 1000 உரிமை தொகை வழங்கும் திட்டம் வேலைக்கு செல்லும் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் திட்டம் என

**கரூர் காமராஜ் மார்க்கெட் திறப்பு!**

இப்படி ஒவ்வொரு திட்டமாக பார்த்து பார்த்து இந்த திட்டங்களோடு சேர்த்து இன்னும் பல திட்டங்களை குறிப்பாக நம்முடைய மாவட்டத்திற்கு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி வருகிறார்கள். சிறிய மாவட்டமாக இருந்தாலும் அரசு வேளாண்மை கல்லூரி அரவக்குறிச்சி, தரகம்பட்டியில் அரசு கலைக் கல்லூரி கள்நெரூர் உண்ணியூர் உயர் மட்ட பாலம்குளித்தலை அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ 40 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்ட கட்டிடம்கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கொண்டிருக்கிறார்கள். கரூர் மாநகராட்சியில் முடிவடைந்த பணிகளோடு கூடுதலாக சாலை அமைப்பதற்காக 20 கோடிகுடிநீர் திட்ட பணிகளை மேம்படுத்த ரூ 7.50 கோடி, புஞ்சை புகழூர் நகராட்சியாக தரம் உயர்வு பள்ளப்பட்டி பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது 476 கோடி ரூபாய் மதிப்பில் கரூரில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு விரைவில் நாம் அந்த பணிகளையும் தொடங்க இருக்கின்றோம். புதிய காவிரி குடிநீர் திட்டம் அதற்காக 113 கோடி நிதிகளை கொடுத்து பணிகள் தொடங்க இருக்கிறது.

இருபது முப்பது ஆண்டுகளாக கரூர் காமராஜ் மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விரைவில் பிரம்மாண்டமான புதிய மார்கெட் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள். அதேபோல சாலைகள் விரிவாக்கம் வெங்கமேடு மேம்பாலத்தில் இருந்து அரசு காலனி வழியாக வாங்கல் மோகனூர் செல்ல 13 கோடி மதிப்பீட்டில் மிகப்பிரமாண்டமான ஒரு சாலை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கரூரில் இருந்து கோவை செல்வதற்கு நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது.

திருவள்ளுவர் மைதானத்தில் ஒரு நூலகம் ரூ.6.90 கோடியில் நூலகம் பிரம்மாண்டமாக அந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுக்கும் கோர்ட்டுக்கு போனார்கள். படிக்கிற குழந்தைகளுக்கு போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவியர்களுக்கு, போட்டி தேர்வுக்கு தயாராக கூடிய மாணவ மாணவிகள் தங்களுடைய வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி கொள்வதற்காக நூலகத்தை பயன்படுத்துகின்றார்கள். அந்த நூல கத்தினு டைய கட்டுமான பணிகளை கூட நிறுத்துவதற்கு நீதிம ன்றத்திற்கு சென்றார்கள். மக்களுக்கு பயன்படும் திட்டங்கள் என்ற சிந்தனை கூட இல்லாமல் தடை போடுகிறார்கள்.

ஆனால் நமது முதலமைச்சர் அவர்களோ மக்களுக்கு என்ன தேவை என சிந்தித்து சிந்தித்து திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். என்பதை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எத்தனை தடைகளை போட்டாலும் அவற்றையெல்லாம் உடைத்து மக்கள் நலத் திட்டங்களை இந்த திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றி வருகிறது.

உழைக்கும் மகளிருக்கு கரூரில் புதிய தங்கும் விடுதி தரகம்பட்டி அரசு கலைக் கல்லூரிக்கு 12 கோடி ரூபாய் மதிப்பிலே புதிய கட்டிடம் மக்கள் நலதிட்டங்கள் செயல்படுத்தப் பட்டு கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் மன உறுதியோடு இருக்கிறார்கள். நான் ஒரு சில கேள்விகளை மட்டும் கேட்க விரும்புகிறேன். உங்களுடைய ஆட்சியில் இந்த ஊருக்கு என்ன செய்தீர்கள்? ஏதாவது ஒரு திட்டத்தை சொல்லுங்கள். ஒரு வேலையும் நடக்கவில்லை வெறும் வாய் மட்டும் தான். நாலைந்து முறை எம் எல் ஏ ஆக இருந்தவர்கள் கூட இந்த பந்தாவுடன் இல்லை. களத்திற்கு நாங்கள் ரெடி. வாருங்கள் சந்திப்போம் களத்தில். எங்களது தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் 200 இல் வெற்றி என்று.

**நான்கு தொகுதிகளையும் வெல்வோம்!**

கரூர் மாவட்டத்திலும் நான்கு தொகுதிகளையும் வெல்வோம். கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எங்களை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தலைவருடைய திட்டங்களை துணை முதலமைச்சர் அவர்களுடைய எண்ணங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வோம். வரலாற்றுச் சாதனையை உருவாக்குவோம். இந்த வீர வணக்கம் நாளில் உறுதி ஏற்போம். அ.தி.மு.க. புளி மூட்டைகள் பொய்யை இனியாவது யோசித்துச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் வி செந்தில்பாலாஜி பேசினார்.

மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி. பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், மாநகரக் கழக செயலாளர் எஸ்பி.கனகராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர் எஸ் .ராஜா, மத்திய மேற்கு பகுதி செயலாளர் ஆர் ஜோதிபாசு, மத்திய கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ். சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி. வளர்மதி, பி.முத்துக்குமாரசாமி, வி.கே. வேலுசாமி, எல். கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் அ.குண சேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி ராஜ் கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே.சாமிநாதன், சி. கருப்பையா, பிபிசரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏகுமார், பேரூர் செயலாளர்கள் கே .அம்மையப்பன், கே. முரளி ராஜா, இ.ரவீந்திரன், ஆர்மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம் முத்து, சி தங்கராஜ், பிஎஸ். மணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆர் செல்வம் ஜி.திவாகர், எஸ் பிரியங்கா, எம் பி. கார்த்திகேயன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு. சக்திவேல், அணி அமைப்பாளர்கள் ஜிம்.எம்சிவா, கே நந்தினி தேவி, கே தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலைபாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ. அப்பாசாமி, எம்.ப்ரின்சி, சி. நவாஸ்கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு. வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி எஸ்மனோகர், எம்பிஎஸ்.சுரேஷ், பங்க் கேசுப்பிரமணி, விஆர். அண்ணா வேலு கலந்து கொண்டனர் . மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எம் பி.கார்த்திகேயன் நன்றி உரை கூறினார்.



விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட,1 வது வார்டு,அம்பாள் நகரில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார்கள்.உடன் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், புதூர் பேரூர் கழகச் செயலாளர் மருதுபாண்டியன், எட்டையாபுரம் பேரூர் கழக செயலாளர் பாரதி கணேசன், புதூர் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா அழகுராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், ராதாகிருஷ்ணன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கேப்டன் கேசவன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இலக்கணம், இலக்கியம் உள்ள ஒரே மொழி நம் மொழி தான்!

# உலகத்தையே ஆளக்கூடிய சக்தி தமிழ்மொழிக்கு உள்ளது!

## திண்டுக்கல் வீரவணக்கநாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், ஜன.27-



திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம், திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். திண்டுக்கல் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின்பிரபாகரன் ஆகியோர் வரவேற்றனர். துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ. பெரியசாமி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் கோவை திராவிட மணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.

இதில் அமைச்சர் இ. பெரியசாமி பேசியதாவது: -

உலகில் உள்ள மொழிகளில் இலக்கணம், இலக்கியம் உள்ள ஒரே மொழி தமிழ் மொழி தான். உலகத்தையே ஆளக்கூடிய சக்தி தமிழ் மொழிக்கு உள்ளது.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மட்டுமே வழங்குகிறது. மீதமுள்ள தொகையான ரூ.1 லட்சத்து 74ஆயிரத்தை தமிழக அரசு வழங்குகிறது. தமிழகம் முழுவதும் வேலைவாய்ப்பற்று இருந்தவர்களில் 20 லட்சம் பேருக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப் பட்டுள்ளது. ஒன்றியத்தில் உள்ள மதவாத ஆட்சிக்கு முடிவு கட்டும் விதமாகவே இனி நமது போராட்டம் இருக்க வேண்டும். இந்தியாவில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும். அதற்கு நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், தமிழ்மணி, கனகதுரை, மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால் உசேன், மார்கிரேட் மேரி, மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், வடக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ். அக்பர், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் துரைப்பாண்டி, பாஸ்கரன், பள்ளபட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் பரமன், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் ப.க.சிவகுருசாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், கொடைக்கானல் கீழ்மலை செயலாளர் வி.எம்.எ.கருமலைப்பாண்டி, பேரூர் கழக செயலாளர்கள் கன்னிவாடி இளங்கோவன், ஸ்ரீராமபுரம் ராஜா, சின்னாளபட்டி ஆ. மோகன்ராஜ், நிலக்கோட்டை ஜோசப் கோவில்பிள்ளை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மருத்துவ அணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், பொறியாளர் அணி எம்.செந்தில்குமரன், விளையாட்டு மேம்பாட்டு அணி பார்த்தசாரதி, விவசாய அணி இல.கண்ணன், மாநகர பகுதி செயலாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்ருல்ஹக், கொடைக்கானல் நகர செயலாளர் முகமது இப்ராகிம், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், இறுதியில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் சூசைராபர்ட் உட்பட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 28.01.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | 1 | மயிலாப்பூர் | சமூக நலக்கூடம், கே.பி.தாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 25-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி